## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் - 2015

----------------------------------------------------------------------

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்(திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை தாபனத்தின் தலைவருக்கு 2017 பெப்ரவரி 23 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

----------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

----------------------------------------

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

----------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக, நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதேனும் செம்மையாக்கல் அவசியமாகக் காணப்பட்டதா என்பதை நான் தீர்மானிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

------------------------------

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற முடியாதுள்ளேன். அதன் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 கூட்டுத்தாபனம் தொடர்ந்து நிகழ்விலிருத்தல்

---

2000 தொடக்கம் 2013 வரை தாபனம் தொடர்ச்சியாக நட்டத்திற்குள்ளானதால் 2013 ஆம் அண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 7,710,099,424 எதிர்மறையான பெறுமதியைக் காட்டியவாறு நிகர சொத்துக்கள் நலிவடைந்திருந்தன. 2014 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சொத்துக்களது மீள மதிப்பீடு காரணமாக உருவாகிய மிகை ரூபா 5,780,204,145 ஆகும். இதன் காரணமாக, நிகர சொத்துக்களது எதிர்மறைப் பெறுமதியானது மீளாய்வாண்டின் போது ரூபா 2,764,039,908 வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ரூபா 4,397,000,000 கூட்டுத் தொகையுடைய நெடுங்கால பிணைமுறிப் பொறுப்பு மற்றும் ரூபா 1,929,176,112 பெறுமதியிலான நடைமுறைப் பொறுப்புகள் என்பன நிலவுவதால் திறைசேரியினதோ அல்லது வேறு அரச நிதி உதவியோ இல்லாது கூட்டுத்தாபனம் இயங்குவதானது நிச்சயமற்றதாகத் தென்படுகின்றது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ‘‘கமட சவிய சதொச படிய’’எனும் நடமாடும் விற்பனை வாகனச் செயற்திட்டத்திற்கு வேறானதொரு கணக்கைப் பேணி, செயற்திட்டத்திலான ஒட்டுமொத்தத் தாக்கத்தை இனங்கண்டு, அதனைக் கணக்கிலிடுவதற்குப் பதிலாக, தாபனத்தால் விற்பனை வாகனத்திற்கு வழங்கப்பட்ட பொருட்களது பெறுமதி மற்றும் அவற்றினால் கூட்டுத்தாபனத்திற்குத் திருப்பி ஒப்படைக்கப்பட்ட பொருட்களது பெறுமதி என்பவற்றுக்கிடையே ஏற்பட்ட ரூபா 140,730,116 வித்தியாசமானது வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஆ) விற்பனைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கென 2006 ஆம் ஆண்டின்போது பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட கடன் ரூபா 275,000,000 ஆகும். இதனைத் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாததுடன், திருப்பிச் செலுத்த வேண்டிய கடனாக அதனைக் காட்டுவதற்குப் பதிலாக பிரதிவியூகப்படுத்தும் ஒதுக்கத்தில் அது உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) 1999 முதல் 2010 வரை கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த கணக்காய்வுக் கட்டணமாகிய ரூபா 8,847,374 மற்றும் 2012 முதல் 2015 வரை கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தையும் கணிப்பிட்டு அதனை செலுத்த வேண்டிய செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்குப் பதிலாக கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வு மற்றும் வரி ஆலோசனைக் கட்டணமாக ரூபா 3,860,592 மாத்திரமே என ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கையில் உள்ள காசாக நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 38,843,286 உண்மையாகவே கையில் உள்ள காசு அல்ல. கூட்டுத்தாபன வியாபார நடவடிக்கையின் போது தாபனம்பெறவேண்டியதாகவிருந்த மீதியும் உள்ளடங்கியிருந்தது.

(உ) தாபனம் அரச வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக் கொண்ட குறுகிய கால இறக்குமதிக் கடனின் பொருட்டு 2014 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 155,058,221 கடன் நிலவியபோதும், அதன் பொருட்டு சேர்ந்து நின்ற தண்டப் பணமாகிய ரூபா 39,444,946 மற்றும் சேர்ந்து நின்ற வட்டியாகிய ரூபா 188,975,005 என்பன கொடுப்பனவு செய்யப்பட வேண்டியுள்ளதாக 2014 செப்டம்பர் 03 ஆந் திகதிய அரச வங்கி முகாமையாளரது கடிதத்தின் மூலம் தெரிய வந்தது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டிற்கான கடனும் வட்டியும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

தாபனத்தால் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த மீதி ரூபா 462,589,308 ஆகும் என 2014 ஆம் ஆண்டிற்கான நெல் சந்தைப்படுத்தல் சபையினது நிதிக்கூற்றுக்கள் மூலம் உறுதி செய்யப்பட்டபோதும், கூட்டுத்தாபனத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியனவாக ரூபா 285,644,838 காட்டப்பட்டிருந்தது. குத்தகை வாடகை, அரிசிச் செயற்திட்டம் மற்றும் பிற வழிகளில் நெல் சந்தைப்படுத்தல் சபையிலிருந்து தாபனம் ரூபா 71,454,575 பெற வேண்டியுள்ளதாக 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தபோதும், நெல் சந்தைப்படுத்தல் சபையினது நிதிக்கூற்றுக்களில் தாபனத்திற்கு எதனையும் செலுத்த வேண்டியுள்ளதாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. இவ்வேறுபாட்டினைத் தீர்த்து வைப்பதற்கு 2017 மார்ச் 20 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை.

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 497,545,836 கூட்டுத் தொகையுடைய 7 நடைமுறைச் சொத்துக் கணக்கு மீதிகள் ரூபா 9,959,816,324 கூட்டுத் தொகையுடைய 6 நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத கணக்கு மீதிகள், ரூபா 56,868,334 கூட்டுத் தொகையுடைய 2 வருமானக் கணக்கு மீதிகள் என்பன சம்பந்தமாக காலப் பகுப்பாய்வு, மீதிகளது உறுதிப்படுத்தல், விரிவான பட்டோலை, கையிருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள் என்பன இல்லாதிருத்தல்.

(ஆ) தொகுதியினது ஏனைய கம்பனிகளுக்குரியதாக மீளாய்வாண்டின் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 116,964,293 வருமானமும் செலவினமாகிய ரூபா 111,675,694 மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 16,020,571 பெறுமதியுடைய நடைமுறை அல்லாத சொத்துக்கள், ரூபா 85,775,325 பெறுமதியான நடைமுறைச் சொத்துக்கள், ரூபா 54,740,686 பெறுமதியான உரித்துகள், ரூபா 47,055,209 பெறுமதியான நடைமுறைப் பொறுப்புகள் என்பவற்றை உறுதி செய்வதற்கு இயலுமான தகவல்களும் பட்டோலைகளும்.

(இ) நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் கொடுப்பனவு செய்ய வேண்டியனவாக காட்டப்பட்ட 17 கணக்கு மீதிகளது ரூபா 183,602,957 கூட்டுத் தொகையை நிச்சயமாக இனங்காண்பதற்குரிய தகவல்கள்.

(ஈ) தாபனம் அரச வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட குறுகிய கால கடனுக்குரிய 2015 ஆம் ஆண்டிற்கான கடனினதும் வட்டியினதும் விபரம் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியனவற்றின் பெறுமதி ரூபா 870,963,097 ஆகும். அதில் ரூபா 389,467,293 அல்லது 45 சதவீதமானது அறவிடப்படுவதற்குப் போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது நட்டக் கடனுக்கான நிதியேற்பாடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான தாபன நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு அரிசி கொள்வனவு செய்வதன் பொருட்டு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த தொகை ரூபா 274,121,687 ஆகும். நெல் சந்தைப்படுத்தல் சபையிடமிருந்து குத்தகை வாடகை மற்றும் ஏனையவற்றிற்குக் தாபனம் பெற வேண்டியிருந்த தொகை ரூபா 72,986,018 ஆகும்.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1991 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கூட்டுறவுமொத்த விற்பனைத் தாபன(திருத்தம்) அதிகாரச் சட்டத்தின் 2.2(அ) பிரிவின் பிரகாரம் நடைபெற்றவாறிருக்கும் பொதுக் கம்பனிகளிலேயே (தாபனம்) முதலீடுகளைத் மேற்கொள்ள முடியுமாயினும், அதற்கு முரணாக ரூபா 10 பெயரளவு முதலீட்டுடனான பங்குகளில் ''வரையறுக்கப்பட்ட சதொச பொருளாதார நிலைய சேவைகள் தனியார் கம்பனி'' மற்றும் ''வரையறுக்கப்பட்ட நிர்மாண மற்றும் பொறியியல் தனியார் கம்பனி'' எனும் பெயர்களில் 02 அரச கம்பனிகளைத் தாபித்து தாபனத்தின் சம்பளம் பெறும் 04 உத்தியோகத்தர்களைப் பணியில் அமர்த்தியிருந்தது.

## 2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

முறையான அங்கீகாரமின்றி கடன் அடிப்படையில் முன்னைய இரு ஆண்டுகளிலும் கூட்டுத்தாபனம் ரூபா 8,660,782 பெறுமதியான தகரத்தில் அடைக்கப்பட்ட மீனை விற்பனை செய்திருந்தது. அதில் ரூபா 4,362,360 ஐ அறவிடுவதற்கு 2016 ஆகஸ்ட் 20 ஆந் திகதியளவிலும் தாபனத்தால் இயலாதிருந்தது.

# 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தாபனத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 541,087,014 பற்றாக்குறை ஆகியதுடன் அதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 310,874,332 ஆகவுமிருந்தது. இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது பற்றாக்குறை ரூபா 230,212,682 அதிகரித்துள்ளது. நெல்லை அரிசியாக்கும் செயற்திட்டத்தின் மூலமான வருமானம் இல்லாது போனமை, ஏனைய செயற்பாட்டு வருவாய் ரூபா 112,632,358 குறைவடைந்தமை, நிர்வாகச் செலவினம் ரூபா 52,034,040 அதிகரித்தமை என்பன மேற்படி பற்றாக்குறை அதிகரிப்பிற்குப் பிரதான காரணிகளாகின.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டில் ரூபா 313,605,785 ஆகிய பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டில் தளம்பலுடன் ரூபா 541,087,014 ஆகியிருந்தது. ஊழியர்களது ஊதியம், வரி மற்றும் தேய்மானத்தைக் கருத்திற் கொள்ளுமிடத்து 2011 ஆம் ஆண்டில் ரூபா 186,511,684 எதிர்மறைப் பெறுமதியுடனிருந்த பங்களிப்பு உச்சமடைந்து 2015 ஆம் ஆண்டில் ரூபா 177,526,282 எதிர்மறைப் பெறுமதியை அடைந்திருந்தது.

### 3.2 தாபனத்திற்கு எதிராக அல்லது தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியான நிகழ்வுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் முடிவளவில் 08 நிறுவனங்களும் 20 நபர்களும் தாபனத்திற்கு எதிராக ரூபா 35,815,071 இழப்பீடு கோரி 46 வழங்குகளைத் தொடுத்திருந்தனர். மீளாய்வாண்டின் போது தாபனம் ரூபா 904,187 இழப்பீட்டை வழங்கியிருந்தது.

(ஆ) தாபனம் 06 நிறுவனங்களுக்கும் 04 நபர்களுக்கும் எதிராக ரூபா 82,781,016 கோரி 10 வழக்குகளைத் தொடுத்திருந்தது. அதன் மூலம் அறவிடப்பட்ட தொகை ரூபா 21,034,413 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தாபனத்தின் 2015 ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டவாறான தாபனத்தின் நோக்கங்களும் பணிகளும் பின்வருமாறு.

(i) அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அத்தியாவசியத்தை முகாமைத்துவத்தை வழங்குதல்

(ii) பொது மக்களுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்களை வழங்குதல்.

(iii) மனிதவள மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துதல்.

(iv) நிறுவனம் தொடர்ந்திருப்பதை நிலைநாட்டுவதற்குப் போதுமான நிதி உற்பத்தித் தோற்றுவாய்களை உருவாக்குதல்.

(v) புதிய உற்பத்திப் பொருள் தோற்றுவாய்க்கான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ளுதல்.

மேற்படி நோக்கங்களுள் ''புதிய உற்பத்திப் பொருள் தோற்றுவாய்க்கான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்ளுதல்'' தொடர்பாக 2015 ஆம் ஆண்டின்போது கவனஞ் செலுத்தப்படவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபனத்திற்குச் சொந்தமான 32 விற்பனைக் கூடங்களும் களஞ்சியக் கட்டிடங்களும் அரசாங்கக் கம்பனியான ''வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. கட்டிட வாடகை சம்பந்தமாக அரசாங்க விலை மதிப்பீட்டாளரின் அறிக்கை பெறப்படவில்லை.

(ஆ) தாபனம் ரூபா 54,722,228 பெறுமதியான சொத்துக்களை ''வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனிக்கு''ஒப்படைத்து அதன் பொருட்டுப் பணத்தைப் பெறுவதற்கோ அல்லது கம்பனியின் பங்குகளைப் பெறுவதற்கோ முறையான இணக்கத்தை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் எய்தாதிருந்தது.

(இ) தாபனம் 1999 ஆம் ஆண்டில் தனியார் கம்பனி ஒன்றில் ரூபா 9,923,710 முதலீடு செய்திருந்தது. எனினும், அக்கம்பனி தொடர் நட்டத்திற்குள்ளாமையால் 1999 முதல் 2015 வரை பங்கிலாபம் எதுவுமே பெறப்படவில்லை.

(ஈ) தாபனம் 2002 ஆம் ஆண்டின் போது சதொச சில்லறைக் கம்பனியில் ரூபா 171,928,690 முதலீடு செய்திருந்தபோதும், பங்கிலாபம் எதனையும் தாபனம் பெறவில்லை. நீதிமன்றக் கட்டளை ஒன்றின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டின்போது கணக்கொழிப்பாளர் நியமிக்கப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டில் கணக்கொழிப்பு நடவடிக்கை முடிவடைந்திருந்தது. இம்முதலீட்டுப் பெறுமதி நட்டக் கடனுக்கான நிதியேற்பாடாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பாடசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு மஹபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியமும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் சதொச நிர்மாண மற்றும் பொறியியல் கம்பனிக்கு வழங்கவேண்டிய தொகை தாபனத்தினூடாக வழங்கப்பட்டிருந்தது. இந்த அரச நிறுவனங்களுக்கு இடையே ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களில் தாபனம் தலையீடு செய்ததற்கான காரணம் விளங்கவில்லை. இந்நிர்மாண வேலை தொடர்பாக சதொச நிர்மாண மற்றும் பொறியியல் கம்பனிக்கு தாபனம் ரூபா 26,285,661 கடனாக வழங்கியிருந்ததுடன், அக்காலப்பகுதிக்குரிய எதுவித இலாபத்தையும் தாபனம் பெற்றிருக்கவுமில்லை.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது தாபனம் நான்கு கணக்காளர்களது சேவையைப் பெற்று சம்பளமும் படியுமாக ரூபா 3,244,869 வழங்கியிருந்தும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் 2012 முதல் 2015 வரை நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 2,193,980 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2014 முதல் 2019 வரை ஐந்தாண்டுச் செயற்திட்ட அமைப்பாக 100 லொறிகளைப் பயன்படுத்தி 2014 திசெம்பர் 04 ஆந் திகதி ஆரம்பித்திருந்த ''கமட சவிய சதொச படிய''எனும் செயற்திட்டம் 2015 சனவரியின் பின்னர் செயலற்றுப் போனதுடன், 2016 மார்ச் 03 ஆந் திகதியளவில் தாபனம் அச்செயற்திட்டத்தால் ரூபா 65,859,217 நட்டத்திற்குள்ளாகியிருந்தது. செயற்திட்டம் செயலிழந்தபோதும், 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் செயற்திட்ட உதவியாளர்கள் வசமிருந்த 15 லொறிகளையும் திருப்பிப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை குறித்த தினங்களில் செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டினது இரு மாதங்களுக்கு ரூபா 66,044 தண்டப் பணம் செலுத்த வேண்டியேற்பட்டது.

## 4.6 பிரதிவியூகப்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்

2003 ஆம் ஆண்டின் போது தாபனம் பிரதிவியூகப்படுத்தலை ஆரம்பித்திருந்தது. 2003 திசெம்பர் 01 ஆந் தினத்தில் உள்ளவாறு 6 வணிக வங்கிகளுக்கு ரூபா 5,493,000,000 கொடுப்பனவு செய்யவேண்டியிருந்தது. அதில் ரூபா 4,397,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டுத் தீர்த்து வைக்கப்படுவதற்கான இணக்கம் வணிக வங்கிகளுடன் ஏற்பட்டு அதன் பிரகாரம் 13 ஆண்டுகளில் முதிர்ச்சியடையும் திறைசேரிப் பிணை முறிகள் குறித்த வணிக வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

அதற்கமைய, திறைசேரிப் பிணை முறியின் பொருட்டு திறைசேரிக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 4,397,000,000 மற்றும் திறைசேரியால் சதொச ரிடெய்ல் கம்பனியின் கடன் கொடுத்தோர் மற்றும் 03 வணிக வங்கிகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 200,000,000 அடங்கலாக மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு திறைசேரிக்கு வழங்கப்பட வேண்டிய மொத்தப் பொறுப்பாக ரூபா 4,597,000,000 நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

இதன் பொருட்டு மீளாய்வாண்டின் இறுதித் தினத்தன்று திறைசேரிக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 3,453,793,134 பிணை முறி வட்டிப் பொறுப்பு ‘‘சதொச பிணைமுறிக்கான கொடுப்பனவு செய்ய வேண்டிய வரி’’எனும் பெயரில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

மேலும், கொடுப்பனவு செய்ய வேண்டிய இந்த ரூபா 4,597,000,000 தொகையில் ரூபா 200,000,000 திறைசேரிக்குக் கிடைக்க வேண்டிய தொகைதானா என்பதைத் திறைசேரி மூலம் உறுதி செய்து கொள்வதற்கு முகாமைத்துவம் தவறியிருந்ததுடன், ஏனைய கடன் கொடுத்தோரின் கீழ் பிரதிவியூகப்படுத்தலாக ரூபா 66,363,460 காட்டப்பட்டதன் மூலம் பிரதிவியூகப்படுத்தல் கொடுக்கல் வாங்கல்கள் முறைப்படி வெளிப்படுத்தப்பட்டோ அல்லது சீராக்கல் செய்யப்பட்டோ இருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. இப்பிரதிவியூகப்படுத்தல் பெறுமதியானது மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் புத்தக வைப்பாகக் காட்டப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி முகாமைத்துவத் தரத்தில் 20 பேர், முகாமைத்துவ உதவி மட்டப் பதவிகளில் 51 பேர், ஆரம்பத்தரப் பதவிகளில் 245 பேர் என 316 மொத்த எண்ணிக்கையைக் கொண்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு 104 மேலதிகமும் 31 வெற்றிடங்களும் நிலவின.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு ஓரேயாண்டில் 3 சம்பள ஏற்றமும் மற்றுமொரு ஆண்டில் 2 சம்பள ஏற்றங்களும் வழங்கப்பட்டதால் மீளாய்வாண்டின் போது ரூபா 159,390 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாக 2012 முதல் 2016 மார்ச் 01 ஆந் திகதியளவில் வழங்கப்பட்ட தொகை ரூபா 589,490 ஆகும்.

(இ) தாபனத்தை ஸ்தாபிக்கும் அதிகாரச் சட்ட ஏற்பாடோ அல்லது வேறெந்த ஏற்பாடுமோ இல்லாததும் தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியில் உள்ளடங்காததுமான தொழிற்படு பணிப்பாளர் பதவிக்கு 2011 ஆம் ஆண்டில் ஆட்சேர்க்கப்பட்டு 2011 முதல் 2016 மார்ச் 31 வரை சம்பளமும் படியுமாக ரூபா 5,781,732 வழங்கப்பட்டிருந்தது.

## 4.8 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தாபன வளங்கள்

சதொச நிறுவனத்தின் 06 உத்தியோகத்தர்கள் தாபனத்தின் உப கம்பனிகளிலும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றிலும் இணைக்கப்பட்டு அவர்களுக்கு மீளாய்வாண்டின்போது சம்பளம் மற்றும் வேறு ஊதியமாக ரூபா 1,526,400 வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையைக் குறித்த நிறுவனங்களிலிருந்து மீளளிப்புப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவுமில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மே 09 ஆந் திகதியன்றே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தாபனத்தின் தொலை நோக்குப் பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு 2013 முதல் 2016 வரையான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், காலத்துக்குக் காலம் அது மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டபோதும், அதில் மனிதவள அபிவிருத்தித் திட்டம், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு அமுலாக்கப்படத் திட்டமிடப்பட்ட பணிகளது செயல் முன்னேற்றத்தைப் பரீட்சிப்பதற்கான செயல் முன்னேற்ற அறிக்கைகளும் தகவல்களும் கணக்காய்விற்குக் கிடைக்கப் பெறவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தபோதும், போதியளவு உதவிப் பதவியணியினர் நியமிக்கப்படாமையால் மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு தாபனத்தில் இடம் பெறவில்லை. உள்ளகக் கணக்காய்வு ஐயவினாவோ அல்லது அறிக்கையோ அரச கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.5 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மதிப்பிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளவாறான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பிடுகையில் 15 முதல் 917 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

## 5.6 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அறிக்கையுடனான தொடர்பு | பந்தி |
|---|---|
| (அ) 2011 - 4.2 ஆம் பந்தி | பெறுமதி ரூபா 5,097,445 ஆகவுள்ள 12 ‘‘கொள்கலன்களது’’மின்சார மோட்டார் தொலைந்து போனமை |
| (ஆ) 2011 - 4.8 ஆம் பந்தி | 2006 செப்டம்பரில் தாபனம் இறக்குமதி செய்த ரூபா 14,501,998 பெறுமதியான 140 அரிசித் தயாரிப்பு இயந்திரங்கள் 2016 செப்டம்பர் 13 ஆந் திகதியளவிலும் தாபனத்தில் பயனற்றிருந்தன. |
| (இ) 2012 - 2.2.3(உ) | 2011 ஆம் ஆண்டின் பொருட்டு வருடாந்தக் குத்தகை வாடகையாகவும் வெளிநாட்டு குடிவகைகளுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணமாகவும் லங்கா சதொச கம்பனியிலிருந்து பெற வேண்டிய ரூபா 71,561,640 மீளாய்வாண்டு முடிவிலும் அறவிடப்படுவதற்கோ அல்லது கணக்குகளில் சீராக்கல் செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தன. |
| (ஈ) 2012 - 4.3(ஆ) | வாடகை அடிப்படையில் பெறப்பட்ட உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குரிய 02 களஞ்சியங்களில் உணவு ஆணையாளரது அனுமதியின்றி ரூபா 78,978,504 செலவிடப்பட்டு தாபனத்தால் நெல் அரைக்கும் ஆலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| (உ) 2012 - 2.2.3(ஈ) | வாகன விற்பனை இலாபம் ரூபா 5,101,356 ஆகும். எனினும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 5,892,489 ஆகக் காட்டப்பட்டதால் வாகன விற்பனை இலாபம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 791,133 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (ஊ) 2012 - 2.2.4(அ) | மீளாய்வாண்டிற்கான பரீட்சை மீதியைப் பரிசீலிக்கையில் 168 சொத்துக்கள் மற்றும் செலவினக் கணக்குகளது ரூபா 27,584,061,602 கூட்டுத் தொகையுடைய வரவு மீதிகளும் 110 வருமானக் கணக்குகளது ரூபா 30,129,471,178 கூட்டுத் தொகையுடைய செலவு மீதிகளும் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிராமை |
| (எ) 2012 - 2.2.4(ஆ) | ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் டீஆர் கடன் மக்கள் வங்கியின் பெயரில் ரூபா 207,050,943 இற்கான குறுகிய கால கடன் காட்டப்பட்டிருந்தது. எனினும், வங்கி அனுப்பிய மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் கடன் மீதி ரூபா 207,097,942 ஆகவிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஏ) | 2012 - 2.2.5(அ) | 2012 திசெம்பர் 31 வரை பொதியிலடைத்தற் பிரிவில் பெறப்பட்ட மொத்த வெள்ளைச் சீனி சம்பந்தமாக 15,000 கிலோ கிறாமுக்கு ரூபா 18,450 கட்டண வித்தியாசம் மற்றும் 23,514 பக்கெட்டுகள் அல்லது 170,119 கிலோ கிறாம் பொதியிலடைத்தந் பொருட்கள் குறைவின் பொருட்டு வருமானம் இழப்பிற்குள்ளாகும் அபாயம் நிலவியமை தொடர்பாக முகாமைத்துவம் இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. |
| (ஐ) | 2013-2.2.3(அ)iii | பரீட்சை மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களை ஒப்பிடப்படும் போது 03 கணக்கீட்டு மீதிகளில் ரூபா 299,798,933 வித்தியாசம் புலனாகியது. |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அதன் பிரகாரம் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேட்டுக் கணக்கிற்கு சுட்டிலக்கம் பயன்படுத்தப்படாமை<br>(ii) நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கு குறிப்புக்கள் சரிவர எழுதப்படாமை<br>(iiii) உறுதிச் சான்றுடன் தொடர்புடைய துணை ஆவணங்கள் முறைப்படி உறுதிச்சான்றுகளுடன் இணைக்கப்பட்டிருக்காமை |
| (ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு | வருடாந்தம் கையிருப்புகளது நேரடி மெய்மையாய்வு நடைபெறாமை மற்றும் தற்போதைய கையிருப்புப் பெறுமதியை இனங்காணாமை என்பன |
| (இ) குத்தகை வாடகை வருமானத்தை அறவிடுதல் | நிலுவையாகவுள்ள குத்தகை வாடகையை அறவிடுவதற்குப் போதிய நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) பதவியணி நிர்வாகம் | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை. |
| (உ) சட்டபூர்வ நடவடிக்கைகள் | உடன்படிக்கைகளில் ஈடுபடுகையில் தொடர் இலக்கங்களைப் பயன்படுத்தாமையால் தாபனம் வெளி நபர்களுடன் ஈடுபடும் உடன்படிக்கைகளது எண்ணிக்கையை இனங்காணாது போதல். |